தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 1, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜூன் 15, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

ஒருவர் ஒரு பிறவியில் கற்ற கல்வியால் கிடைக்கும் சிறப்புக்கள் அந்தப் பிறவிக்கு மட்டுமல்லாமல், எழுகின்ற பல பிறவிகளுக்கும் தொடர்ந்து வரும்.

1. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

சாலை அமைத்தல்

***13143—திரு. பி.என்.பி. இன்பசேகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், கோட்டூர்மலை, ஏரிமலை மற்றும் அலகட்டு ஆகிய மலைப் பகுதிகளுக்கு சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பெண்ணாகரம் ஒன்றியம், வட்டுவனஹள்ளி ஊராட்சிக்குட்பட்ட, சீங்காடு முதல் ஏரிமலை வரை 6 கி.மீ. நீளம், திம்மலாம்மேடு முதல் கோட்டூர்மலை வரை 5 கி.மீ. நீளம், கோட்டூர்மலை முதல் அலகட்டு வரை 5 கி.மீ. நீளம் உள்ள சாலைகள் மலைப் பகுதிகளில் பாலக்கோடு வனச் சரகம், மொரப்பூர் காப்புக்காட்டில் அமைந்துள்ளன. இக்கிராமங்களுக்குச் சென்று வர 9 அடி அகலத்தில் ஏற்கெனவே உரிமைப் பாதை (Right of Way) அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இக்கிராமங்களுக்குச் செல்லும் மலைப் பாதை மிகவும் சரிவாக உள்ளதால், வாகனப் போக்குவரத்திற்கு உகந்தவாறு கொண்டை ஊசி வளைவுகளுடன் சாலை அமைக்க ஒரு ஹெக்டேருக்கு மேல் வன நிலம் தேவைப்படும். எனவே, மேற்படி கிராமங்களுக்கு சாலைகள் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு மேல் வன நிலம் தேவைப்படுவதால், வன பாதுகாப்புச் சட்டம், 1980, பிரிவு (2)—ன்கீழ் மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் செயல்படும் இவ்வரசு, மத்திய அரசின் அனுமதி பெறும்பட்சத்தில் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் சாலை அமைக்க வேண்டும் என்ற உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தந்தையார் தருமபுரி முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர் திரு. பெரியண்ணன் அவர்கள் 2006 ஆம் ஆண்டு இம்மாமன்றத்திற்கு பெண்ணாகரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு வாய்ப்பளித்த எங்கள் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்கள் செயல் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இடையில் உடல்நிலை சரியில்லாமல் அவர் இயற்கை எய்தியதன் காரணமாக, பிறகு நடைபெற்ற பெண்ணாகரம் இடைத்தேர்தலில் எனக்கு வாய்ப்பளித்து, மீண்டும் 2016 பொதுத் தேர்தலில் அதே தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்கள் செயல் தலைவர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி

2017 ஜுன் 15]

அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலக்கோடு ஒன்றியம், கன்சால்பைல் என்ற ஊரிலிருந்து கோட்டூர்மலை செல்வதற்கு 6 கி.மீ. தூரம், நடைபாதைதான் உள்ளது. அங்கு சுமார் 500 பேர் வாழ்கின்றனர். பாலக்கோடு ஒன்றியம், சீங்காடு என்ற ஊரிலிருந்து ஏரிமலை செல்வதற்கு 5 கி.மீ. தூரம், நடைபாதைதான் உள்ளது. அங்கும் சுமார் 500 பேர் வாழ்கின்றனர். வரைபடத்தில் ஒரு வழிப்பாதைதான் இருக்கின்றது. அங்கு உணவுப் பொருட்கள் வழங்குவதற்கு எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் பகுதிநேர ரேஷன் கடை உருவாக்கப்பட்டது. இந்தப் பாதை வழியாகத்தான் மக்களுக்கு உணவுப் பொருட்களை கழுதை மேல் ஏற்றிச் செல்ல வேண்டும். சில நேர்வுகளில், அவரவர்கள் தலைமேல்கூட தூக்கிக் கொண்டு செல்ல வேண்டிய அவலநிலை உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, 1,000 பேர் வசிக்கும் இம்மலைப்பகுதி மக்களுக்கு சாலை வசதி செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போலவே, சாலைகள் அமைப்பதில் எந்தவித மாறுபட்ட கருத்தும் நமக்கு இல்லை. ஆனால், அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்த வனச் சாலைகள் வனப் பகுதியில் அமைந்துள்ளன. இச்சாலைகள் பெருமழை, மண் சரிவு, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் அவ்வப்போது சேதம் அடைகின்றன. இதனால் வனங்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் வன அலுவலர்களும் மற்றும் சாலைகளைப் பயன்படுத்தும் பொதுமக்களும் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே, இந்தச் சாலைகள் பல்வேறு திட்டங்களில், அரசினால் ஒதுக்கப்படும் நிதியைப் பொறுத்து, முன்னுரிமை அடிப்படையில் கப்பிச் சாலையாகவோ, தார்ச் சாலையாகவோ மேம்படுத்தப்பட்டு, தற்போது இருந்துவரும் பயன்பாட்டை மேலும் வளமாக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையும், நிதியும் பெற்று நிதிநிலைக்கேற்ப அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 ஜூன் 15

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன் அவர்கள்.*

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலக்கோடு ஒன்றியம், ஏரிமலை என்ற ஊரிலிருந்து அலகட்டு என்ற கிராமத்திற்கு இடையே சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அதாவது, சீங்காடிலிருந்து 10 கிலோ மீட்டர். இந்த கிராமத்திற்குச் செல்வதற்கு வரைபடத்தில் நடைபாதைகூட கிடையாது. சுமார் 300 பேர் வசிக்கும் கிராமம் அது. இவர்களுக்குத் தேவைப்படும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை கழுதைகள்மூலமும், அவர்களின் தலையின்மீதும் வைத்துதான் எடுத்துச் செல்ல வேண்டிய அவலநிலை உள்ளது. உடல்நிலை சரியில்லை என்று சொன்னால், கட்டில்மீது வைத்துதான் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவலநிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாவட்ட நிருவாகமும், வனத் துறையும் கலந்து பேசி, கோட்டூர்மலை, ஏரிமலை, அலகட்டு ஆகிய மூன்று கிராமங்களுக்கும் சாலை வசதிகளை உருவாக்கித் தருவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே விளக்கமாகப் பதில் சொன்னாலும், மக்களின்மீது உள்ள அன்பால், அதற்கு அழுத்தம் கொடுத்து, மாவட்ட நிருவாகம் மற்றும் துறையினுடைய அனுமதியின்மூலமாக செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார். அந்தச் சாலைகளை மேம்படுத்துவதற்கு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம்* (Ministry of Environment, Forest and Climate Change) *துறையினால் வடிவமைக்கப்பட்ட முகவரியில் உரிய படிவத்தில் பிரேரணை முதலில் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற ஒரு விதி இருக்கிறது. அவர்கள் அந்தப் பகுதியில், பொருள்களை தலைமீதும், கழுதைமீதும் ஏற்றிக்கொண்டு செல்வதாகச் சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நிருவாகத்திடம் பேசி, நம்முடைய*

2017 ஜூன் 15]

உள்ளூர் அமைச்சர் பெருமக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட மற்றவர்களிடமும் அதுபற்றி கலந்து பேசி முடிவெடுக்கப்படும். சென்ற முறை ஓசூர் வரை சென்றிருந்தோம். தருமபுரி மற்றும் அந்த மலையில் உள்ள சூழ்நிலைகளைப் பார்ப்பதற்கு வனத் துறை அதிகாரிகளோடு செல்கின்றபோது ஓசூரிலிருந்து திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. சட்டமன்றம் நடைபெறும் காலங்களிலே, அன்புத் தம்பி நம்முடைய மாண்புமிகு இன்பசேகரன் அவர்கள் சொல்லியிருக்கின்ற பகுதிகளுக்கு வனத் துறையின் மூத்த அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகளை அழைத்துச் சென்று, அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டிய சூழ்நிலையை உருவாக்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் எங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் அரசை சிறப்பாக வழி நடத்திக் கொண்டிருக்கின்ற தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், பர்கூர் ஊராட்சியானது, மலைவாழ் மக்களைக் கொண்ட ஊராட்சியாகும். இந்த ஊராட்சியிலே சுண்டப்பூர், வேலாம்பட்டி, தொள்ளி என்ற குக்கிராமங்களில் உள்ள மக்கள் வனச் சாலையின் வழியாக தங்களது கிராமங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள். அந்தச் சாலையானது வனத் துறையின்மூலம் போடப்படாமல் இருப்பதால், மண் தடத்தில் சென்று கொண்டிருக்கின்றார்கள். அவசர காலத்திற்கும், அவர்களின் வண்டி, வாகனம் செல்வதற்கும் உடனடியாகச் செல்ல முடியாத சூழ்நிலை அவர்களுக்கு இருக்கின்றது. எனவே, மலைவாழ் மக்களின் நலன் கருதி, பர்கூர் ஊராட்சியில் உள்ள சுண்டப்பூர், வேலாம்பட்டி, தொள்ளி சாலைகளை வனத் துறையின்மூலம் தார்ச் சாலையாக அமைத்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பர்கூர் பகுதியினுடைய சூழ்நிலை, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இன்பசேகரன் அவர்களுக்குச் சொன்ன அதே பதில் நிலையில் தான் இருக்கின்றது. இருந்தாலும், மலைப் பகுதியில் கழுதை மூலமாக பொருட்களைக் கொண்டு செல்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே, பர்கூர் வழியாக தருமபுரி வரை சென்றுதான் அந்தப் பகுதிகளைப் பார்வையிட்டு வந்திருக்கின்றோம். இப்பொழுது நம்முடைய உறுப்பினர் இன்பசேகரன் அவர்கள் சொல்லியிருக்கின்ற பகுதிகளுக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பர்கூர் பகுதிக்கும் வன அதிகாரிகளை அழைத்துச் சென்று, நம்முடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வனப் பகுதியில் உள்ள சாலைகளான கன்னாவிளை—பூச்சிக்காடு—மேலக்காணம் சாலை, கீழநாலுமாவடி—கன்னாவிளை—பூச்சிக்காடு சாலை, காயாமொழி—கன்னாவிளை சாலை, நாசரேத்—ஏரல் சாலை ஆகிய சாலைகள் மிகவும் சேதமடைந்து, பயணம் செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது.*

அந்தச் சாலைகள் ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்கு முன்பாகப் புதுப்பிக்கப்பட்டவையாகும். காரணம், அந்தச் சாலைகளுக்கு வனத் துறையினுடைய அனுமதி வழங்கப்படாமல் உள்ளது. எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் வனப் பகுதிகளிலுள்ள சாலைகளைப் புதுப்பித்துக்கொள்வதற்கு நெடுஞ் சாலைத் துறைக்கு அனுமதி வழங்க ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

2017 ஜூன் 15]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதியில் உள்ள சாலைகள் 15 வருடங்களாகப் பராமரிப்பு செய்யப்படவில்லை என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய குறிப்பினை எங்களுக்கு அனுப்பினால், நெடுஞ்சாலைத் துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் கலந்து, அந்தச் சாலைகளைச் சீரமைக்கத் தேவையான நிதியாதாரங்களைப் பொறுத்து, விரைவான நடவடிக்கை எடுப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

துணை மின் நிலையம்

***2104—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் மற்றும் திருமுக்கூடல் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டத்தினை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் கோரியவாறு உத்திரமேரூர் மற்றும் திருமுக்கூடல் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*